**களணி பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 29 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து களணி பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்கவேண்டிய மானிய வருமானம் ரூபா 18,061,328 கணக்கீடு செய்யப்பட்டதனால் அதற்குள் உள்ள 2014 ஆம் வருடத்தில் 12 ஒப்பந்தத்திற்காக கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 1,159,580 உள்ளடக்கப்பட்டதனால் அந்தப் பெறுமதியில் கிடைக்க வேண்டிய மானிய வருமான கணக்கு மற்றும் மானிய வருமான கணக்கும் கூடுதலாக காட்டப்பட்டுள்ளன. இந்த தவறினை திருத்துவதற்காக பொது நாட்குறிப்பேடு இலக்கம் 04 மூலம் கிடைக்க வேண்டிய மானிய வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டதால் அவ்விரு கணக்குகளும் ரூபா 1,159,580 பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டுள்ளன.

(ஆ) கூடுதலாக கிடைத்த கிடைக்க வேண்டிய திட்டங்களுக்கான மானிய நிதி ரூபா 4,809,093 சென்மதியாளருக்கு ஒதுக்கிவைக்கப்படாது திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 1,413,007 பெறுமதியான காகிதாதிச் செலவு பொது நாட்குறிப்பு இலக்கம் 65 இன் படி ரூபா 359,519 கணக்கீடு செய்யப்பட்டதை திருத்துவதற்காக புதிய நாட்குறிப்பு இலக்கம் 05 இன் படி திருத்தம் செய்யும் போது ரூபா 359,519 கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்வு சான்றின்மை

ஒட்டுமொத்த தொகையான ரூபா 48,430,866 பெறுமதியான நடவடிக்கைகளுக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 76,820,822 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 20,157,882 ஆக விளைந்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

சபையின் செயலாளினால் மீளாய்வாண்டில் அனுப்பிய மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 இல் மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|
| ஆதனவரி | 99,179 | 35,561 | 40,606 |
| உரிமங்கள் | 2,022 | 1,665 | 357 |
| வாடகைகள் | 17,781 | 11,991 | 5,789 |

#### 2.2.2 ஆதனவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் உள்ள ரூபா 35,000,000 பெறுமதியான ஆதனவரி நிலுவையை ரூபா 40,600,000 ஆக கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் இறுதியாக ஆதனவரி விலைமதிப்பீடு 2009 ஆம் ஆண்டில் மேற்கொண்டிருந்தது. 2016 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்வு பரீட்சிப்பு வரை ஏழு வருடத்திற்கு மேலாக இருந்த போதும் விலை மதிப்பீட்டை மீளாய்வு செய்வதற்கு சபை தவறியுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 40,606,002 கிடைக்க வேண்டிய ஆதனவரி நிலுவையில் 1 – 3 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய ஆதனவரி நிலுவை ரூபா 23,208,569 மற்றும் 5 – 10 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய ஆதனவரி நிலுவை ரூபா 421,739 உம் உள்ளடக்கியிருந்தது. இதற்காக கிடைக்க வேண்டிய ஆதனவரி வருமானம் அறவிடுவதற்கு சபை மூலமாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வாடகைகள்**

--------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) களணி பஸ் தரிப்பிடத்தில் உள்ள 24 கடைகள் 2014 யூலை 17 ஆந் திகதியில் இருந்து மூடப்பட்டிருந்தமையால் அதற்காக கிடைக்க வேண்டிய வாடகைகளை அறவிடுவதற்கான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிதிக்கூற்றுக்களின் படி கிடைக்க வேண்டிய இறைச்சி/மீன் கடை வாடகை ரூபா 959,728 தொகையில் 5 - 10 வருடங்கள் காலம் கடந்த ரூபா 78,496 நிலுவையும் உள்ளடங்கியுள்ளது.

**2.2.4 உரிமங்கள்**

--------------

2015 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய மொத்த வியாபார உரிமங்களின் எண்ணிக்கை 1480 இருந்த போதிலும் வழங்கப்பட்ட வியாபார உரிமங்களின் எண்ணிக்கை 885 ஆக காட்டப்பட்டிருந்தது. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கையொப்பம் இடப்படுவதற்கு கையளித்த 480 உரிமைப்பத்திரங்கள் 2015 திசெம்பர் மாதம் வரை சபைக்கு கிடைக்காமல் இருந்தபோதும் அது பற்றி அவர்களிடம் கேட்காது இருந்ததனால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-----------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

-----------------------------------------

2010 மே 26 ஆம் திகதியில் இலக்கம் 4/2010 ஆகிய ஓய்வூதிய சம்பள சுற்றுநிறுபத்தின் மூன்றாவது பந்தியின் பிரகாரம் தற்காலிக, ஒப்பந்த, நாளாந்த அடிப்படையிலான ஓய்வூதியம் இல்லாத ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு கொடுக்க வேண்டியிருந்த போதிலும் அந்தக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அந்த ஊழியர்களால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கான நீதிமன்ற தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 209,673 பங்களிப்பு மற்றும் மேலதிகக் கட்டணம் கொடுப்பனவு செய்வதற்கு தொழில் நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

**3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

---------------------------------------------------------------------

2010 ஆம் ஆண்டில் ரூபா 1.8 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வரணஸ்கந்த கட்டப்பட்டிருந்த பொது மண்டபம் நலச்சேவைகளுக்கு பயன்படுத்தப்படாது பல வருடங்களாக மூடப்பட்டிருந்தது.

**3.3 ஊழியர் சட்டம்**

---------------------

2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 19,488,619 ஊழியர் கடன் நிலுவையில் உள்ள வேறு இடங்களிற்கு இடமாற்றம் செய்யப்பட்ட மற்றும் பணியிலிருந்து விலகிய 04 ஊழியர்களிடம் அறவிட வேண்டிய ரூபா 171,723 காணப்பட்டதால் அவ் நிலுவையிலிருந்து ரூபா 167,750 பெறுமதியான நிலுவை 5 வருடத்திற்குட்பட்டதாகவும், ரூபா 3,973 பெறுமதியான நிலுவை 10 வருடத்திற்கு மேலானதாகவும் காணப்படுகின்றது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டாம் நிலை பதவி பணியில் 03 வெற்றிடம் காணப்பட்டுள்ளன. மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒரு பதவி 2013 நவம்பர் 29 இல் இருந்து நிரப்பப்படாது காணப்படுகின்றது.

(ஆ) 2014 திசெம்பர் 29 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014(1) இன் பிரகாரம் நிரந்தர நியமனம் கிடைத்த வேலை மேற்பார்வையாளர் ஒருவரும், வேலைத் தொழிலாளர்கள் 33 பேரும், காவலாளிகள் 07 பேரும் மற்றும் 17 சுகாதார தொழிலாளர்கள் ஆகிய 59 பேர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்த போதிலும் அனுமதிக்கப்பட்ட ஆளணிகள் மீளாய்வு செய்வதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டில் ஆரம்ப தர பதவியினரில் உள்ள 33 அலுவலர்கள் சம்பளமற்ற விடுமுறையாக 935 ½ நாட்கள் எடுத்தமையால் சபையின் தினசரி வேலை சரியான முறையில் நடைபெறாது பாதிப்படைந்திருந்தது.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 செப்டெம்பர் 27 ஆந் திகதி அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 452 இல் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் சமூக நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் வழங்கும் நேரத்தில் அவர்களிடம் ஏற்கனவே 03 வேலைத்திட்டங்களுக்கு மேலாக இருக்கக்கூடாது என அறிவித்திருந்த போதிலும் அதற்கு முரணாக சீமா சகித்ததலுகம விவிதசேவாசமூபகார சங்கத்திற்காக 2015 பெப்ரவரி 11 ஆம் திகதி 23 வேலைத்திட்டங்களும் 2015 மார்ச் 16 ஆம் திகதியில் 26 வேலைத்திட்டற்களுக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்த வேலைத்திட்டங்கள் 8 – 12 நாட்களான குறுகிய காலப்பகுதியில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது நடைமுறைக்கு பொருத்தமானதா என்பதும் மற்றும் வேலைத்திட்டங்களின் தரம் பற்றியும் கணக்காய்வில் சந்தேகத்திற்கிடமாகவும் உள்ளது.

(ஆ) கடந்த ஆண்டிலும் மற்றும் மீளாய்வாண்டிலும் ரூபா 32,020,614 செலவு செய்யப்பட்டு குனு பிட்டிய மற்றும் வனவாசல பிரதேசங்களில் மின்சார பிரேத எரியூட்டும் இடங்கள் கட்டப்பட்டிருந்த போதிலும் குனுபிட்டிய மின்சார பிரேத எரியூட்டும் இடம் 2015 நவம்பர் 23 ஆம் திகதியும், வனவாசல மின்சார பிரேத எரியூட்டும் இடம் 2015 ஒக்டோபர் 29 ஆந் திகதியில் வேலைகள் முடிவடைந்திருந்த போதும் 2016 ஏப்ரல் மாதம் வரைக்கும் மக்களின் பயன்பாட்டுக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 திண்மக்கழிவு முகாமைத்துவம்

-------------------------------------

சபை எல்லையினுள் 22 கிலோமீற்றருக்குட்பட்ட குப்பைகள் எடுக்கும் போது அதற்காக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 16,911,107 செலவு செய்திருந்தது. மானெல்கம பிரதேசத்திற்கு குப்பைகள் போடுவதற்கு சுற்றாடல் அதிகார சபையில் அனுமதியை பெற்றிருப்பது பற்றி சான்றுகள் இருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(ஊ) களஞ்சிய முகாமைத்துவம்